தினத்தந்தி

# தனியார் நிறுவனங்களில் பி.எஸ்.ஐ. முத்திரை முறைகேடு

## இந்திய தர நிர்ணய அதிகாரிகள் நடவடிக்கை

சென்னை, ஜூன்.8-

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி தாலுகா துரைநல்லூர்
கிராமத்தில் உள்ள அர்ஜீன் பிளைவுட் அன்ட் வீனர்ஸ் பிரை
வேட் லிமிடெட் என்ற கம்பெனியில் இந்திய தர நிர்ணய முத்
திரையை (பி.ஐ.எஸ்.) முறைகேடாக பயன்படுத்துவதாக இந்
திய தர நிர்ணய அலுவலகத்துக்கு (தென் மண்டலம்) புகார்
வந்தது. அதன் பேரில் அதிகாரிகள் 2 பிரிவுகளாக சென்று,
குறிப்பிட்ட அந்த கம்பெனியில் திடீர் சோதனை நடத்தியதில்,
உரிய அனுமதி இல்லாமல் முறைகேடாக பி.ஐ.எஸ். முத்தி
ரையை பயன்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டது. பி.ஐ.எஸ்.
முத்திரையிடப்பட்ட 1,100 பிளைவுட் பொருட்கள் பறிமுதல்
செய்யப்பட்டன.

இதேபோல் மதுரவாயல், ஆலப்பாக்கம் மெயின் ரோட்டில்
உள்ள எஸ்.ஆர்.கே. நேச்சுரல் புரொடக்ட்ஸ் மற்றும் காஞ்சீபு
ரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் தாலுகா ஜெயம்நகரில் உள்ள
ஜிமார் ஆகிய கம்பெனிகளில் உரிய அனுமதியின்றி பி.ஐ.எஸ்.
முத்திரையிடப்பட்ட 20 லிட்டர் பாட்டில்கள் பறிமுதல் செய்
யப்பட்டன. இதுகுறித்து சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவ
டிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

இது குறித்து அதிகாரிகள் கூறுகையில், "பொருளின் தரத்தை
குறிக்கும் பி.ஐ.எஸ். முத்திரையை அனுமதியின்றி முறைகேடாக
பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும். இக்குற்றத்தில்
ஈடுபட்டோருக்கு 2 வருட சிறைத்தண்டனை அல்லது ரூ.5
லட்சம் அபராதம் அல்லது அபராதத்துடன் கூடிய சிறைத்
தண்டனையும் விதிக்கப்படும். இந்த முறைகேடு குறித்து அறிந்
தால் பொதுமக்கள் புகார் அளிக்கவேண்டும்'' என்றனர்.

வங்கி கொள்ளையில் ஈடுபட்டதாக கூறி பி.டெக் பட்டதாரியை தாக்கிய

DAILY THANTHI

08.06.2018

HCNBO-I

PSC V07/SC-I (SV)

Send to CAD (Proid Press Note)

20/06/08

# बीआईएस ने जब्त की 1100 प्लाई

चेन्नई. भारतीय मानक ब्यूरो के दक्षिण क्षेत्रीय कार्यालय चेन्नई से अधिकारियों की टीम ने बीआईएस के मानक मार्क के दुरुपयोग की गोपनीय सूचना मिलने पर छापेमारी की। गुप्त सूचना पर कदम ब्यूरो ने पोन्नेरी तालुक के तुरईनल्लूर विलेज की जीएनटी रोड स्थित अर्जुन प्लाइवुड एवं वीनर्स प्राइवेट लिमिटेड के यहां छापा मारा। छापेमारी में विभाग की टीम ने अवैध बीआईएस लाइसेन्स के साथ आईएसआई मार्का वाले विभिन्न आकार की करीब 1100 प्लाइवुड की प्लेटें जब्त की। साथ ही कंपनी के विरुद्ध मामला भी दर्ज किया गया है। आईएसआई मार्का के दुरुपयोग के लिए आरोपी को अधिकतम दो वर्ष का कारावास या दो लाख रुपए तक का जुर्माना या दोनों सजा भी हो सकती हैं।

समाचार पत्र – राजस्थान पत्रिका / Rajasthan Patrika
तिथि/dt. 08-06-2018

प्रमुख / HCMBO-I

PS (YUJ) SCBI(SU)

ADM (Lead press note)

Scanned by CamScanner